ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2345/10 - 2023 අගෝස්තු මස 14 වැනි සඳුදා - 2023.08.14

*2345/10 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகார சபைச் சட்டம் (திருத்தப்பட்ட)**

1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகார சபைச் சட்டத்தின் 54 (1) மற்றும் 54 (2) ஆம் பிரிவுகளின் கீழ் எனக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஆகிய நான், இச்சட்டத்தின் கீழான கொள்கைகள் மற்றும் ஏற்பாடுகளைச் செயற்படுத்தும் மற்றும் அதிகாரமளிக்கும் செயற்பாடுகளுடன் தொடர்புடையதாகத் தயாரிக்கப்படுகின்ற ஆணைகளை இத்தால் பிரசுரிப்பதுடன், இவ் ஆணைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அதிகாரம் பெற வேண்டும்.

**ரொஷான் ரணசிங்க,**
*நீர்ப்பாசன அமைச்சர்.*

*நீர்ப்பாசன அமைச்சு,*
*2023, ஓகத்து 08.*

இச்சட்டத்தின் கீழான பணிகள், நோக்கங்கள், கொள்கைகள் மற்றும் அதிகாரங்களை ஆராய்தல், செயற்படுத்துதல் மற்றும் அதிகாரமளிக்கச் செய்தல் போன்ற செயற்பாடுகள் தொடர்பாக விடயப் பரப்பு அமைச்சருக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கும், வழிகாட்டும் பொருட்டும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபுணர்களை உள்ளடக்கிய மதியுறைக் குழுவொன்று இத்தால் நியமிக்கப்படுகின்றது :

(1) விடயப் பரப்பு தொடர்பான அறிவுத் திறனுள்ள நாடளாவிய சேவையைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் (ஓய்வுபெற்ற) ;
(2) திடல்சார் விசேட அறிவுத் திறனுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளரொருவர் ;
(3) நிதி விடயப் பரப்பு தொடர்பாக விசேட அறிவுத் திறனுள்ள உத்தியோகத்தரொருவர் ;
(4) விடயப் பரப்பு தொடர்பாக விசேட அறிவுத் திறனுள்ள பொறியியலாளரொருவர் ;
(5) சட்டத் துறையில் அனுபவமுள்ள சட்டத்தரணியொருவர்.

EOG 08-0135

1A-PG 6443 — 366 (2023/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*